பக்த விஜயத்தை உலகிற்கு முதன்முதலில் எழுத்து வடிவில் கொண்டுவந்த அன்பர் இவரே! இவரைத் திருத்தொண்டத்தொகை பாடிய வடதேச சுந்தரர் என்றும் கூறலாம்.மஹா புண்ய க்ஷேத்ரமாம் காசியில் வாழ்ந்தவர் இவர்.தூய குருபக்தி மூலம் அஷ்டமா சித்திகளைக் கைவரப்பெற்றவர்.

மிக்க விழிப்புணர்வில் வருவதே பக்தி.பக்தி மூலம் மனிதன் தன் வினைகளை அறுக்க முடியும்.இதை உணர்த்தும் பல அன்பர்களின் வரலாறே மஹா பக்த விஜயம்.அதைக் காசியில் தான் முதன்முதலில் எழுத்து வடிவில் இறைவனின் அருளால் முன்னோர் அருளினர்.

**இவரது குருபரம்பரை இங்கே தரப்படுகின்றது:**
ஆச்சார்யர் ஸ்ரீக்ருஷ்ண நந்த்ஜி

இவரது மாணவர் ஸ்ரீஅனந்தானந்த்ஜி

இவரது மாணவர் ஸ்ரீபோகாரி தாஸ்

போகாரி தாஸின் இரு மாணவர்களில் ஒருவர் ஸ்ரீஅக்ரஜி, மற்றவர் ஸ்ரீகிலஜி

ஸ்ரீஅக்ரஜியின் மாணவனே நாபாஜி சித்தர்.

**பஞ்சத்தில் வந்த குரு செல்வம்**
நாபாஜி சிறிய வயதில் இருக்கும் போது காசிப் பகுதியில் கடும் பஞ்சம் நிலவியது.பலர் வேற்றிடம் புலம் பெயர்ந்தனர்.நாபாஜியின் விதவைத் தாய் ஏழ்மையையும் பஞ்சத்தையும் பொறுக்க முடியாமல் குழந்தையை விஸ்வநாதர் கோயில் வாசலில் விட்டுவிட்டு கங்கைக்குள் குதித்து மடிகிறாள்.விவரம் தெரியாத பிள்ளையோ பசியால் அழுகிறது.

கோயிலுக்கு வந்த அக்ரஜி தன் ஞானத்தால் இவரது கதியை உணர்ந்து தன் ஆஸ்ரமத்திற்கு அழைத்துச் சென்று வளர்த்தார்.

இயற்கையில் பந்தபாசங்களை அறுத்த நாபாஜி, முழுமையாகத் தன் பிறப்பின் பலனை உணர்கிறார்.தன் குருவே சகலமும் என்று சரண் புகுந்து, அவர் காட்டிய

வழியில் அமைதியாகத் தன்னைப் பக்குவம் செய்து கொள்கிறார்.ஆஸ்ரமத்திற்கு தேசம் முழுவதும் இருந்து வரும் பல ஆன்மீகப் பெரியோரின் தரிசனமும் ஆன்மீக சொற்பொழிவுகளும் இவரது ஆன்மீகப் பரிணாமத்துக்கு உரம் சேர்த்தன.

**இளமைச் சித்தர்**
இளம் வயதில் மனிதனுக்கு உரிய லௌகீக குணங்கள் அற்றுப் போய் சதா விழிப்புணர்வில் தன்னை ப்ரஹ்ம தத்துவத்துடன் பிணைத்துக் கொண்டு நாபாஜி வாழும் நிலையில் சுயநலமே இல்லாத குரு சேவையால் அஷ்டமாசித்திகள் கைவரப் பெற்றார்.அதை அவர் பெரிதாகவே எண்ணவில்லை.

தன் குருவை நாடி வரும் அன்பர்களுக்குப் பணி செய்வதையே பெரும் கைங்கர்யமாகக் கொள்கிறார்.அந்நிலையில் ஒரு நாள் மௌன விரதம் மேற்கொள்ளும் நிலையில் குரு ஏகாந்தமாய் இருக்க எண்ணி இவரை ஆஸ்ரமத்தைக் காக்கும்படி கூறினார்.

இறைவனை முற்றிலும் உணரும் அக்ரஜி அன்று சற்று அலைபாய்ந்த மனம் கொண்டு ஸ்திடகாத்ரமாய் தெய்வீகத்தை நுகர முடியாமல் தவித்தார்.அதை உணர்ந்த நாபாஜி சர்வ சாதாரணமாகத் தன் குருவிடம் பவ்யமாக, **”ஐயா! நேற்று நீங்கள் ஒரு பெண்ணின் கணவனைக் கப்பலுடன் புயலில் இருந்து காப்பாற்றும்படி இரவில் ப்ரார்த்தனை செய்தீர், அதோ இறைவன் அரபிக்கடலில் அப்பணியில் இருக்கிறான்....சற்று நேரத்தில் உங்கள் முன் வருவான்”** என்றாரே பார்க்கலாம்!!!

**ஹிந்தி திருத்தொண்டத்தொகை**
தன் சீடனின் அதிபக்குவம் பெற்ற ஆன்மீக பலத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்த அவர், **”பல அன்பர்களின் சரிதங்களை உமக்குக் கூறியிருக்கிறேன்.மேலும் பல குருமார்கள் நம்மிடம் பகிர்ந்து கொண்ட பல அன்பர்களின் பக்தி வரலாற்றை எளிய மக்கள் புரிந்து கொள்ளும் குவாலியர் ஹிந்தி வட்டார வழக்கில் எழுதுக! அதையே காசியில் இருந்து ப்ரவச்சனம் மூலம் பரப்புக!”** என்று ஆசீர்வதிக்க, நாபாஜி எழுதிய அவ்வரலாறே நமக்குக் கிடைத்த முழுமுதல் ஸ்ரீமஹா பக்த விஜயம் ஆகும்!

**இன்று பல குருமார்களை அண்டி வாழும் பலர் இவரது வாழ்க்கையப் பின்பற்றி நற்காரியங்கள் செய்தால் நன்றாக இருக்கும்.தூய குரு சேவையும் அவர் தரும் ஆன்மீகப் பயிற்சிகளை ஸ்ரத்தையுடன் பின்பற்றினால் ஆன்மீக பலம் கைகூடும் என்பதில் ஐயம் இல்லை!** ஹரி ஓம்!